# ஷெர்பா (Sherpa)

**வசிப்பிடம்:** சிறு இனமாக இருந்தாலும்கூட ஷெர்பா ஆசியாவில் பெயர்பெற்ற இனமாகும். சுமார் 1,60,000 ற்கும் மேற்பட்ட ஷெர்பாக்கள் இமயமலையின் இருபுறங்களிலும் வசிக்கின்றனர். ஷெர்பாக்களின் எண்ணிக்கை மற்ற நாடுகளைக் காட்டிலும் நேபாளில் அதிகமாக உள்ளது. இந்தியாவின் டார்ஜிலிங் மாவட்டத்தில் 45,000 ற்கும் மேலும், சிக்கிம் மற்றும் அருணாசலம் மாநிலங்களில் சிறு எண்ணிக்கையிலும் ஷெர்பாக்கள் வசிக்கின்றனர்.

நேபாளில் கி.பி.2011 ல் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி ஷெர்பாக்களின் மக்கள்தொகை 1,12,946 ஆகும், சிந்துபால்சோக்(Sindhupalchok) மாவட்டத்திலும் குறிப்பாக சோலு கும்பு (Solu Khumbu) மாவட்டத்தின் நாம்சே (Namche) பஜாரிலும் அதிக எண்ணிக்கையில் ஷெர்பாக்கள் வசிக்கின்றனர். மற்றுமொரு 3,000 ஷெர்பாக்கள் பூட்டானை உறைவிடமாகக் கொண்டுள்ளனர். திபெத்தில் இவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். வெவ்வேறு ஆவணங்கள், சில 'வெறும் 400 பேர்' என்றும், சில 'சீனாவில் 800 ஷெர்பா மொழி பேசும் மக்கள் உண்டு' என்றும் சில '1000 த்தை தாண்டாது என்றும்' கூறுகின்றன. திபெத்தில் ஷெர்பாக்கள் திங்சி (Dinggye), திங்ரி (Tingri) மற்றும் சங்மு (Zhangmu) மாவட்டங்களில் வசிக்கின்றனர். சிறு எண்ணிக்கையிலான ஷெர்பாக்கள் இந்நாள்களில் தென் கொரியா மற்றும் அமெரிக்காவில் குடியேறியுள்ளனர். இந்த விவரங்களில் ஷெர்பாக்களைக் காட்டிலும் வித்தியாசமான மொழிபேசும் ஹெலம்பு ஷெர்பாக்கள் சேர்க்கப்படவில்லை.




**அடையாளம்:** திபெத்தில் இவர்கள் அதிகாரப்பூர்வமாகத் திபெத்தியர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஷெர்பா என்பதின் பொருள் "கிழக்கத்திய மக்கள்" என்பதாகும். இவர்களது சிறிய முகத்தைக் கொண்டும் திபெத்தியர்கள் முற்புறம் கட்டும் வர்ணமயமான ஒரு துணியை இவர்கள் பின்புறம் கட்டுவதைக் கொண்டும் இவர்களைத் திபெத்தியர்களிடத்திலிருந்து வித்தியாசப்படுத்த முடியும்.

**மொழி:** ஷெர்பா மொழி திபெத்திய மொழியோடு ஒத்துப்போவதினால் பெரும்பாலானவர்களால் எளிய காரியங்களைத் திபெத்திய மொழியில் தொடர்புகொள்ள முடியும்.

**வரலாறு:** பதினைந்தாம் நூற்றாண்டில் மேற்கில் இடம் பெயர்வதற்கு முன் எல்லா ஷெர்பாக்களும் திபெத்தில் வசித்தார்கள் என நம்பப்படுகிறது. 'மங்கோலிய ராஜா இவர்களைத் தான் பின்பற்றும் புத்த மத்தத்தின் பிரிவிற்கு மாற்ற முயற்சி செய்தபோது ஷெர்பாக்கள் தப்பி கும்பு பகுதியில் குடியேறினர். ஒரு சீன குறிப்பு 'இவர்கள் தங்களைச் சிசுவான் மாநிலத்தின் கம் பகுதியில் வசிக்கும் கம்பா திபெத்தியர்களின் வம்சாவளி என நம்புவதாகக் கூறுகிறது.' அநேக நூற்றாண்டுகளுக்கு முன் ஷெர்பாக்களுடைய முன்னோர்கள் இந்தியா மற்றும் நேபாளிலுள்ள கோவில்களுக்குப் புனிதப் பயணம் மேற்கொண்டு திரும்பும்போது இங்கேயே தங்கிவிட்டார்கள்.

**பழக்கவழக்கங்கள்:** அநேகருக்கு ஷெர்பா என்ற பெயர், உலகிலேயே மிக உயரமான மலையான எவரெஸ்ட் சிகரத்தின் பெயரிலிருந்து பிரிக்க முடியாத பெயராகத் தோன்றுகிறது. எவரெஸ்ட் சிகரத்தில் கி.பி.1953 ல் முதன் முறையாக ஏறியவர்கள் நியூசிலாந்தைச் சேர்ந்த எட்மண்ட் ஹில்லரி (Edmund Hillary) மற்றும் நேபாளியாகிய டென்சிங் நோர்கே ஷெர்பா (Tenzing Norgay Sherpa) ஆகியவர்களாகும். பெண்களில் முதல் முறையாக ஏறியவர் பாசங் லாமு ஷெர்பாவாகும் (Pasang Lhamu Sherpa). இதுவரை அநேக ஷெர்பா வழிகாட்டிகள் வெளிநாட்டவர்களுக்கு எவரெஸ்ட்டில் ஏற உதவி செய்துள்ளனர்.

**மதம்:** இவர்கள் திபெத்திய புத்தமதத்தைப் பின்பற்றுகின்றார்கள்; இருந்தும் திபெத்தியர்கள் மத்தியில் காணப்படும் பக்தி வைராக்கியம் இவர்கள் மத்தியில் காணப்படுவதில்லை.

**கிறிஸ்துவம்:** இந்தியா மற்றும் நேபாளில் வாழும் ஷெர்பா மக்கள் மத்தியில் பணிகள் செய்யப்பட்டுவருகிறது. நேபாளில் சில ஷெர்பா கிராமங்களில் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. ஆனால் திபெத்தில் வாழும் ஷெர்பாக்கள் மத்தியில் அறியப்பட்ட எந்தப் பணிகளும் செய்யப்படவில்லை. இந்நாள்களில் நேபாளின் கும்பு, சிந்துபால்சோக் மற்றும் காத்மண்டு மாவட்டங்களில் 50 க்கும் மேற்பட்ட ஷெர்பா விசுவாசிகள் உண்டு.




**Population:**
79,650 (2000)
95,400 (2010)
114,300 (2020)

**Countries:** India, Nepal, Bhutan, China, South Korea, USA

**Buddhism:** Tibetan

**Christians:** 40

### மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Sharpa, Sharpa, Bhotia, Xiaerba, Serwa, Xiarba

**மக்கள்தொகை:** 45,400 in India (2001, FMC South Asia)

30,000 in Nepal (2000, B Grimes [1998 fi gure]);153,000 in Bhutan (1995,Languages of Bhutan); 800 in China (1996, B Grimes [1994 fi gure]) also in South Korea and USA

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, ஹிமாலய, திபெத்திய-கனௌரி, திபெத்திய, தென் திபெத்திய மொழி

**மொழி வழக்குகள்:** 3 (Solu, Khumbu, Ramechaap)

**திபெத்திய புத்தமதம்:** 98%

**கிறிஸ்துவம்:** 0.1%

**வேதாகமம்:** சில பகுதிகள் கி.பி. 1977 (மொழிபெயர்ப்பு நடந்துகொண்டிருகிறது)

**இயேசு திரைப்படம்:** உண்டு

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** Sherpa:Solu

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு** : SCR

**கிறிஸ்துவத்தின் நிலை**

